பிரசார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை-4

*04 06 2026 THURSDAY 12 40 PM*

ஆகாஷ்வாணி - செய்திகள்

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாடுமுழுவதும் சாலை கட்டமைப்பு வசதிகள் தொடர்ந்து மேம்படுத்தப்பட்டு வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

3. தமிழகத்தில் 18 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பிலான 3 திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் இன்று கையெழுத்தானதாக மாநில அரசு கூறியுள்ளது.

4. தென்மேற்கு பருவமழை கேரளத்தில் இன்று தொடங்கியது.

5. உலக யோகாசன சாம்பியன் போட்டி இன்று அஹமதாபாதில் தொடங்குகிறது.

>>>>>><<<<<

நாடுமுழுவதும் சாலை கட்டமைப்பு வசதிகளை மத்திய அரசு தொடர்ந்து மேம்படுத்தி வருவதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், பீகார், ஒடிசா, தெலங்கானா மாநிலங்களின் சாலை மேம்பாட்டுப் பணிகளுக்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன் காரணமாக, அந்த மாநிலங்களில் போக்குவரத்து வசதி மேம்படும் என்றும், விவசாயிகள், மாணவர்கள், பெண்கள் மற்றும் இளையோர் பயனடைவார்கள் என்றும் திரு. நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

அரசுமுறைப் பயணமாக புதுதில்லி வந்துள்ள வெனிசுலாவின் தற்காலிக அதிபர் செல்வி. *Delcy Rodriquez*-ஐ வெளியுறவு அமைச்சர் டாக்டர் ஜெய்சங்கர் இன்று சந்தித்து பேசினார்.

வெனிசுலா அதிபரின் இந்தியப் பயணம், இருநாடுகளுக்கு இடையேயான நல்லுறவை மேலும் வலுப்படுத்தும் என்று பின்னர் சமூகவலைதளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் டாக்டர் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

தூய எரிசக்தி பயன்பாட்டிற்கு ஊக்கமளிக்கப்பட்டு வருவதாக பெட்ரோலியத்துறை அமைச்சர் திரு. ஹர்தீப்சிங் புரி கூறியுள்ளார்.

சமூகவலைதளத்தில் இதனை தெரிவித்துள்ள அவர், 20 சதவீத எத்தனால் கலந்த பெட்ரோலில் இயங்கும் இருசக்கர வாகனம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

இதுபோன்ற நடவடிக்கைகள் கச்சா எண்ணெய் இறக்குமதியை வெகுவாக குறைக்க உதவிடும் என்றும் திரு. ஹர்தீப்சிங் புரி தெரிவித்துள்ளார்.

>>>>>><<<<<

நீதிமன்றங்களில் உள்ள வழக்குகளை பைசல் செய்வதற்கான காலவரம்பினை நிர்ணயம் செய்ய உத்தரவிடக் கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவினை, விசாரணைக்கு ஏற்றுக்கொள்ள உச்சநீதிமன்றம் மறுத்துள்ளது.

நீதிபதிகள் திரு. விக்ரம்நாத், திருமதி. வி. மோகனா அமர்வு, இன்று இதற்கான உத்தரவினை பிறப்பித்தது.

இந்த மனு விசாரணைக்கு உகந்ததல்ல என்றும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

இனி,

பார் போற்றும் 12 ஆண்டுகள்.

பிரதமர் திரு. நரேந்திர மோடி தலைமையிலான மத்திய அரசு கடந்த 12 ஆண்டுகளாக பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

ஏழை, விவசாயிகள், மகளிர் மற்றும் இளையோர் நலனுக்கான பல்வேறு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டுள்ளன.

துறை வாரியாக அரசின் சாதனைகளை விளக்கும் தொகுப்பில் இன்று இடம்பெறுகிறது "தொழில்துறை வளர்ச்சி" .

*(தொழில்துறையின் வளர்ச்சிக்காக மத்திய அரசு பல்வேறு சீர்திருத்த நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.*

*இதன் காரணமாக தொழில் புரிவது எளிதாக்கப்பட்டதோடு, முதலீட்டாளர்களின் நம்பிக்கையையும் பெற்றுள்ளது.*

*உலக அளவில் முதலீட்டிற்கு உகந்த நாடாக இந்திய உருவெடுத்துள்ளது என்றால் அது மிகையல்ல.*

*புத்தொழில்களை ஊக்குவிப்பதற்காக கடந்த 2016ஆம் ஆண்டு தொடங்கப்பட்ட திட்டத்தின் மூலம், அந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 2 லட்சத்து 23 ஆயிரமாக அதிகரித்துள்ளது.*

*வருமான வரியை இணையதளம் வாயிலாக செலுத்துவதற்கான நடவடிக்கைகளும் எளிதாக்கப்பட்டன.*

*2017ஆம் ஆண்டு சரக்கு மற்றும் சேவை வரி அறிமுகப்படுத்தப்பட்டது. அது தொடர்பான சீர்திருத்தங்களும் கடந்த செப்டம்பர் மாதம் அறிவிக்கப்பட்டது.*

*இந்த சீர்திருத்த நடவடிக்கை, வரி செலுத்தும் நடைமுறையை எளிதாக்கியுள்ளதோடு, நிர்வாகத்தின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்துள்ளதாக கூறுகிறார் சென்னையைச் சேர்ந்த பட்டய கணக்காளர் திருமதி. புவனேஷ்வரி.*

*(சவுண்ட் பைட் - புவனேஷ்வரி 60 செகண்ட்ஸ்)*

*சிறு குறு தொழில்துறையின் வளர்ச்சியிலும் மத்திய அரசு கவனம் செலுத்தியது. இதற்கான இணையதளத்தில் 8 லட்சத்திற்கும் மேற்பட்டோர் இணைந்துள்ளனர்.*

*அரசின் கொள்முதல் நடவடிக்கைகளும் டிஜிட்டல்மயமாக்கப்பட்டதன் மூலம் வெளிப்படைத்தன்மை உறுதி செய்யப்பட்டது.*

*தொழில்நுட்பம், சீர்திருத்தம், நம்பிக்கை அடிப்படையிலான நிர்வாகம் போன்றவற்றின் மூலம் தொழில்துறை வளர்ச்சியில் வீறுநடை போடுகிறது).*

>>>>>><<<<<

தமிழகத்தில் 18 ஆயிரத்து 600 கோடி ரூபாய் மதிப்பில் 3 திட்டங்களை செயல்படுத்துவதற்கான ஒப்பந்தம் L&T நிறுவனத்திற்கும், மாநில அரசுக்கும் இடையே இன்று கையெழுத்தானது.

இன்று சென்னையில், முதலமைச்சர் திரு. விஜயை, அந்த நிறுவனத்தின் தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு. எஸ்.என். சுப்பிரமணியன் சந்தித்துப் பேசிய பின்னர், இந்த ஒப்பந்தம் கையெழுத்தானதாக மாநில அரசின் செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

இதன்படி, காஞ்சிபுரம், கோவை, திருவள்ளூர் மாவட்டங்களில் இந்த திட்டங்கள் செயல்படுத்தப்படவுள்ளதாக அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்மூலம் 8 ஆயிரத்து 200 வேலைவாய்ப்புகள் உருவாகக்கூடும் என்றும் அதில் கூறப்பட்டுள்ளது.

தமிழகத்தில் திரு. விஜய் தலைமையிலான அரசு பொறுப்பேற்ற பின்னர் மேற்கொள்ளப்படும் முதலாவது புரிந்துணர்வு ஒப்பந்தம் இது என்றும் அந்த செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

>>>>>><<<<<

கேரளாவின் நிதிநிலை குறித்த வெள்ளை அறிக்கை அம்மாநில சட்டப்பேரவையில் இன்று தாக்கல் செய்யப்பட்டது.

முதலமைச்சர் திரு. V.D. Satheesan இதனை தாக்கல் செய்து பேசுகையில், கேரளாவின் கடன் சுமை 5 லட்சத்து 7 ஆயிரம் கோடி ரூபாயாக உள்ளது என்று கூறினார்.

நிதிநிலைமையை சீர் செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டியது அவசியமாகிறது என்றும் முதலமைச்சர் தெரிவித்தார்.

இதுதொடர்பான விவாதத்தில் பங்கேற்றுப் பேசிய எதிர்க்கட்சித் தலைவர் திரு. பினராயி விஜயன், இந்த ஆவணம் அரசியல் ஆவணமாக உள்ளது என்றும், நிதித்துறை தயாரித்த ஆவணமாக இல்லை என்றும் குறை கூறினார்.

இதனை மறுத்த முதலமைச்சர், வெள்ளை அறிக்கையை முழுமையாக ஆய்வு செய்யாமல், எதிர்க்கட்சித் தலைவர் இக்கருத்தை தெரிவிப்பது ஏற்புடையதல்ல என்றார்.

முதலில் வெள்ளை அறிக்கையை படித்துவிட்டு கருத்து தெரிவிக்குமாறும் திரு. V.D. Satheesan கூறினார்.

>>>>>><<<<<

பீகார் மாநிலத்தில் தனியார் மருத்துவமனையின் தீவிர சிகிச்சைப் பிரிவில் நேரிட்ட தீ விபத்தில் 3 பேர் உயிரிழந்தனர்.

முஸாபர்பூர் மாவட்டத்திற்கு உட்பட்ட பகுதியில் செயல்பட்டு வந்த இந்த மருத்துவமனையில் இன்று அதிகாலை இந்த விபத்து நேரிட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

இந்த தீ விபத்துக்கான காரணம் குறித்து, உயர்நிலை விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக பீகார் அரசு தெரிவித்துள்ளது.

>>>>>><<<<<

இலங்கையில் முதியோர் காப்பகத்தில் நேரிட்ட தீ விபத்தில் 11 பேர் உயிரிழந்தனர், 7 பேர் காயமடைந்தனர்.

கொழும்பு அருகே உள்ள காப்பகத்தில் தீ விபத்து நேரிட்டபோது 72 பேர் அதில் இருந்ததாகவும், இதன் காரணமாக உயிரிழப்பு அதிகரிக்கக்கூடும் என்று அஞ்சப்படுவதாகவும் எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

விபத்துக்கான காரணம் குறித்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருவதாகவும் அவர் மேலும் கூறுகிறார்.

>>>>>><<<<<

மிஸோரம் மாநிலத்தின் 9 இடங்களில் அமலாக்கத் துறையினர் சோதனை மேற்கொண்டு வருகின்றனர்.

மியான்மரை ஒட்டிய எல்லைப்பகுதியில் இந்த சோதனை நடைபெற்று வருவதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சட்டவிரோத பணப்பரிமாற்ற தடைச் சட்டத்தின் கீழ், இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாக அவர் மேலும் கூறுகிறார். புகையிலைப் பொருட்களை கடத்துவது தொடர்பான புகாரின் அடிப்படையில் பல்வேறு வழக்குகள் பதிவு செய்யப்பட்டுள்ளன.

>>>>>><<<<<

கேரளத்தில் தென்மேற்கு பருவமழை இன்று தொடங்கியது.

கேரளத்தில் வழக்கமாக ஜூன் 1ஆம் தேதி தொடங்கும் இந்த பருவமழை 3 நாட்கள் தாமதமாக தொடங்கியுள்ளதாக வானிலை ஆய்வு மையம் கூறியுள்ளது.

>>>>>><<<<<

உலக யோகாசன சாம்பியன் போட்டி இன்று அஹமதாபாதில் தொடங்குகிறது.

முதன்முறையாக நடைபெறவுள்ள இப்போட்டியில் இந்தியா, அமெரிக்கா, கானா, கென்யா, மலேசியா, இலங்கை, உஸ்பெகிஸ்தான் உட்பட 60 நாடுகளைச் சேர்ந்த 400 மேற்பட்டோர் பங்கேற்கின்றன.

>>>>>><<<<<

Ulaanbaatar ஓப்பன் மல்யுத்த சாம்பியன் போட்டியில் இந்தியாவின் Sachin Sahrawat அரையிறுதிக்கு முன்னேறியுள்ளார்.

ஆடவர் 67 கிலோ எடைப்பிரிவு காலிறுதி ஆட்டத்தில் அவர், 8-5 என்ற புள்ளிக்கணக்கில் மங்கோலியாவின் Otgonnasan Tserenpuntsag-ஐ வென்றார்.

87 கிலோ எடைப்பிரிவில் சுனில்குமாரும் அரையிறுதிக்கு தகுதி பெற்றுள்ளார்.

>>>>>><<<<<

ஆசியா ஓசியானா மல்யுத்த சாம்பியன் போட்டி, வியட்நாமில் இன்று தொடங்குகிறது.

>>>>>><<<<<

ஆப்கானிஸ்தானுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் போட்டித் தொடரில், காயம் காரணமாக விராட் கோலி பங்கேற்க மாட்டார் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

3 போட்டிகளைக் கொண்ட இந்த தொடரின் முதலாவது ஆட்டம் வரும் 13ஆம் தேதி தரம்சாலாவில் நடைபெறவுள்ளது.

>>>>>><<<<<

கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் உயர்நிலை குழுக் கூட்டம் காணொலி வாயிலாக இன்று நடைபெறுகிறது.

டிவென்டி டிவென்டி கிரிக்கெட் போட்டிக்கான கேப்டனை தேர்ந்தெடுப்பது குறித்து இதில் விவாதிக்கப்படவுள்ளது.

>>>>>>END<<<<<